*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 101/2018***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-6 (LW-8)***

*Name / Father's Name:* ***திரு.நீலக்கண்ணன் த/பெ. ராமசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05.03.2026.**

துவக்க நேரம் 12.27 A.N

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர், அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2017 அன்று ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபொழுது அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் தெடாவூர் புதுாரை சேர்ந்த மாசிலாமணி (38) என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார்.

2) மாசிலாமணியை விசாரித்தேன். அவர் கடந்த 04.03.2017 அன்று தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் அவரை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் அவரது தெருவில் வைத்து, அவரது கை, கால்களில் தாக்கியதாக கூறி, அவருக்கு கழுத்துப்பகுதியில் வலி இருப்பதாகவும் சொன்னார்.

3) அவரை பரிசோதித்ததில் அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. அவருக்கு முதலுதவி செய்து, உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். சிகிச்சை முடிந்து கடந்த 09.03.2017 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவித்தேன். மாசிலாமணிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(மாசிலாமணியின் விபத்து பதிவேட்டுடன்கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார், என்னிடம் விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அடிபட்டவர் சொல்லித்தான் அவரை கை, கால்களில் அடித்ததாக எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். வலி உள்ளது என்பதை என்னால் நேரடியாக உணரமுடியாது என்று சொன்னாலும், அடிபட்டவர் சொல்லித்தான் எனக்கு, அடிபட்டவருக்கு வலி உள்ளது என்பதை தெரிந்துகொண்டேன் என்று சொன்னாலும் சரிதான்.

முடிவு நேரம் 12.35 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.05 16:24:59 +0530

Judicial Magistrate No.2, Attur.